முதன்மை மாவட்ட நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.

O.S. No.170/2013

17.06.2019

வா.சா.1 : பெயர் : பாலகுமார்

மேற்படி சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டு 1 மற்றும் 2 ம் பிரதிவாதிகள் தரப்பில் தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

1 மற்றும் 2 ம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

14.06.2019 அன்றைய தினம் காட்டப்பட்ட வீடியோவில் நான் திருமணத்திற்கு அழைப்பதற்காக சென்ற சம்பவம் இருந்தது. யாருடைய திருமணத்திற்காக என்றால் பிரபாகரனின் திருமணத்திற்கு ஆகும். பிரபாகர் என்னுடைய நண்பர். எந்த தேதியில் திருமணம் நடந்தது என்றால் ஞாபகமில்லை. எந்த வருடம் என்றால் ஞாபகமில்லை. நானும், சிவாவும், பிரபாகரனும் திருமண அழைப்பு வைக்க சென்றோம். சிவா என்பவர் எனது சித்தப்பா மகன். நான் தாக்கல் செய்த பதில் உரையில் 8 ம் பத்தியில் காட்டப்படும் சங்கதிகள் எந்த அடிப்படையில் கொடுக்கப்பட்டது என்றால் எனது பெரியப்பா காட்டிய விபரங்களை கொடுத்துள்ளேன். பிரான்சிஸ் சேவியர் என்பவர் தயார் செய்த சொத்து மதிப்பீட்டு சான்றிதழை என் பெரியப்பா காட்டினார். அந்த மதிப்பீட்டு சான்றிதழின் நகல் என்னிடம் இல்லை. அந்த சான்றிதழை எனது பெரியப்பா எப்போது காட்டினார் என்றால் அது ஞாபகமில்லை. எப்போது பதிலுரை தாக்கல் செய்யப்பட்டது என்றால் ஞாபகமில்லை. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு காட்டினார். என்னுடைய வழக்குரையில் இந்த விபரங்களை சொல்லவில்லை என்றால் சரிதான். அதற்கு காரணம் உள்ளதா என்றால் இல்லை. 2 முதல் 7 பிரதிவாதிகளினுடைய வருமான வரி ரிட்டன்களை பார்த்துள்ளேன். அவற்றை இந்த வழக்கு போடுவதற்கு முன்பு பார்த்துள்ளேன். எப்போது என்று ஞாபகமில்லை. அந்த வருமான வரி ரிட்டன்களை நான் தயார் செய்யவில்லை. என்னுடைய பதிலுரையில் பத்தி 8 ல் குறிப்பிட்டுள்ள விபரங்களை தசரதன் அண்ட் கோ என்கிற ஆடிட்டர் நிறுவனம் கொடுத்தது. தசரதன் அண்ட் கோ அந்த பேப்பரை என்னிடம் கொடுத்தார்களா என்றால் இல்லை எனது பெரியப்பாவிடம் கொடுத்தார்கள். வங்கியில்

கடன் பெறுவதற்காக தயார் செய்யப்பட்டது. முதல் பிரதிவாதி வங்கியில் கடன் வாங்கியதற்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. பதில் உரையில் 8 ம் பத்தியில் குறிப்பிட்டுள்ள சொத்துக்கள் 2 முதல் 7 பிரதிவாதிகளின் தனிப்பட்ட சொத்துக்கள். 6 கல்லூரிகளுக்கு 10.27 ஏக்கர் நிலம் கொடுத்த விபரம் எனது பெரியப்பா சொல்லி தெரியும். என்னுடைய கட்டிடத்தில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தபோது இந்த விபரத்தை சொன்னார். 1 ம் பிரதிவாதி தொடர்பாக 4 ம் பிரதிவாதியிடம் பேசியுள்ளேன். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு பேசியுள்ளேன். இந்த வழக்கிற்கு பிறகும் அவரிடம் பேசியுள்ளேன். என்னிடம் காட்டப்பட்ட வீடியோவில் உள்ள நிகழ்வு இந்த வழக்கிற்கு பின்னிட்டு ஏற்பட்டது. முதல் பிரதிவாதி அறக்கட்டளையிலிருந்து இமயம் சிட்பண்ட்ஸ் நிறுவனத்திற்கு பணம் எவ்வாறு மாற்றப்பட்டதாக சொல்கிறேன் என்றால் கட்டிடம் கட்டுவதற்காக காண்ட்ராக்ட் கொடுத்த பணத்தை இமயம் சிட்பண்ட்ஸிற்கு மாற்றிவிட்டார்கள். நான் கட்டிடம் என்று சொல்வது கல்லூரி கட்டிடத்தை குறிக்கும். எவ்வளவு பணம், எப்போது என்றால் 2011 க்கு பிறகு. எவ்வளவு தொகை என்று தெரியாது. நான் பதில் உரையில் சொல்லியுள்ள பத்மராஜ், ரங்கராஜ் என்பவர்கள் தான் கட்டிட காண்ட்ராக்டர்கள் மற்றும் இமயம் சிட்பண்ஸின் டைரக்டர்கள். எந்த கட்டிடங்களுக்கு காண்ட்ராக்ட் எடுத்தார்கள் என்றால் கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு கூடுதல் கட்டிடங்கள், பாலிடெக்னிக், மகளிர் விடுதி, workshop, பொறியியல் கல்லூரி, மாணவர்கள் விடுதி ஆகும். மேற்சொன்ன கட்டிடங்கள் அனைத்தும் முதல் பிரதிவாதி அறக்கட்டளைக்கு கட்டுப்பட்டது. ஒவ்வொரு கட்டிடமும் எவ்வளவு சதுரடி என்று தோராயமாக தெரியும். எவ்வளவு செலவுகள் ஆனது என்றும் தெரியும். மேற்சொன்ன கட்டிடங்கள் அனைத்தும் வங்கியில் கடன் பெற்று கட்டப்பட்டது என்றும், இமயம் சிட்பண்ட்ஸிற்கு எந்த தொகையும் மாற்றப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. முதல் பிரதிவாதிக்கு கட்டுப்பட்ட கட்டிடங்களின் மொத்த மதிப்பு ரூ. 25 கோடி இருக்கும். இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு முதல் பிரதிவாதி வேறு கட்டிடங்கள் கட்டுகிறதா என்று

எனக்கு தெரியாது. தேனா வங்கியில் வாங்கிய கடனை இமயம் சிட்பண்ட்ஸிற்கு மாற்றியுள்ளதாக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. செந்தில்குமார் என்பவர் அக்கௌண்டன்ட். அவர் பிஎஸ்ஸி படித்துள்ளார். காண்ட்ராக்ட் பணி செய்வதற்கு குறைந்தபட்ச கல்வி தகுதி உள்ளதா என்றால் தெரியாது. செந்தில்குமார் அரசாங்க கட்டிடங்களை கட்டுவதற்கான உரிமம் பெறவில்லை என்று சொல்லுகிறேன். அவருக்கு கட்டிடம் கட்ட தெரியாது. மேற்சொன்ன விபரத்தை என்னுடைய பதில் உரையில் சொல்லவில்லை. முதல் பிரதிவாதி கட்டிடம் கட்டுவதற்கு காண்ட்ராக்டர்களுடன் போட்ட ஒப்பந்தத்தை பார்த்துள்ளேன். 1 முதல் 3 பிரதிவாதிகள் 4 ம் பிரதிவாதி மீது நடவடிக்கை எடுப்பதை தெரிந்து அவரது கையாளான என்னை கொண்டு இந்த வழக்கு போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு எவ்வித முகாந்தரமும் இல்லை என்றும், நானும் 4 ம் பிரதிவாதியும் இரண்டு கல்லூரிகளை பெறுவதற்காக இந்த வழக்கு போட்டுள்ளோம் என்றால் சரியல்ல.

பிரதிவாதி வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் எதிரி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.